**Dinakaran, Coimbatore, Nov 15 2008**

2 தினகரன்
கோவை 15 நவம்பர் 2008

## வினாடி வினா போட்டி

# கோத்தகிரி பள்ளி வெற்றி

கோவை, நவ.15: டாடா கன்சல்டன்சி சர்வீசஸ்(டி.சி.எஸ்) சார்பில் பள்ளிகளுக்கிடையேயான தகவல் தொழில்நுட்ப வினாடி வினா போட்டி கோவை அவினாசி ரோட்டில் உள்ள சி.ஐ.டி. கலையரங்கத்தில் நேற்று நடந்தது.

இப்போட்டியில் கோவை, திருப்பூர், பொள்ளாச்சி, காங்கயம், சத்தி, ஈரோடு, உடுமலை, மேட்டுப்பாளையம், ஊட்டி, கோத்திரி, குன்னூரிலிருந்து 70 பள்ளிகளை சேர்ந்த 800க்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டனர். இறுதி சுற்றில் 6 அணிகள் பங்கேற்றன. இதில் 8ம் வகுப்பு முதல் 12ம் வகுப்பு வரை உள்ள மாணவர்கள் கலந்து கொண்டனர். வினாடி வினா போட்டியை குவிஸ் மாஸ்டர் கிரி பாலசுப்ரமணியன் நடத்தினார்.

இறுதி சுற்று போட்டியில் ஊட்டி லேயிட்லா மெமோரியல் பள்ளி, கோவை ஜி.டி.மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி, எஸ்.பி.ஓ.ஏ. மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, பெர்க்ஸ் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி, மேட்டுப்பாளையம் சச்சிதானந்தா ஜோதி நிக்கேதன் பள்ளி, கோத்தகிரி புனித ஜூட்ஸ் ப்ளிக் பள்ளி ஆகியன பங்கேற்றன.

இப்போட்டியில் கோத்தகிரி புனித ஜூட்ஸ் ப்ளிக் பள்ளி வெற்றி பெற்று கோப்பை தட்டி சென்றது. இப்பள்ளி மாணவர்களான கோலின் பால் ஜாய் மற்றும் ஹர்சித்தா மேத்தா ஆகியோருக்கு முதல்பரிசாக லேப்டாப் கம்ப்யூட்டர் பரிசாக வழங்கப்பட்டது. இரண்டாம் இடத்தை பிடித்த ஊட்டி லேயிட்லா மெமோரியல் பள்ளி மாணவர்களான அழகப்பன் மற்றும் சின்கோம்பா சின்தம் ஆகியோருக்கு பரிசு கோப்பை, போர்ட்டபிள் டிவிடி பிளேயர் மற்றும் டிஜிட்டல் கேமிரா பரிசாக வழங்கப்பட்டது.

எழுத்து தேர்வில் வெற்றி பெற்று பிராந்திய இறுதி சுற்றுக்கு தகுதி பெற்ற 6 அணிகளுக்கு டி.சி.எஸ். பேக்பேக், எம்.பி.3 பிளேயர்கள், ஹெட் போன்கள், காபி டேபிள் புக்ஸ் மற்றும் டிஷர்ட்டு, கிப்ட் கூப்பன்கள் பரிசாக வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் போலீஸ் ஐ.ஜி. சீமா அகர்வால், டி.சி.எஸ். நிறுவனத்தின் லேர்னிங் மற்றும் டெவலப்மென்ட் குளோபல் ஹெட் நரசிம்மன் ஆகியோர் பரிசுகளை வழங்கினர்.